# இருமொழிய சமூகச்சூழலில் மொழிமாறும் இயல்புகள்: தமிழ் - சிங்கள மொழிகளை அடிப்படையாகக்கொண்ட சமுதாய மொழியியல் ஆய்வு

ஷிறோமி மோகன்

**ஆய்வுச் சுருக்கம்**

மொழி என்பது மனித எண்ணக்கருத்துக்களின் வெளிப்பாடுகள் என்ற அடிப்படையில் பேச்சொலிகள் இணைந்து சொற்களை உருவாக்கி சொற்களின் இணைப்பின் ஊடாக தொடர்களும் வாக்கியங்களும் வெளிப்படுத்தப்படுகின்றன. ஆனால் மனிதன் தான் வாழும் சமூகச்சூழலுடன் பிணைந்து வாழ்பவன் என்ற அடிப்படையில் அவனால் பேசப்படும் மொழியானது சமூக நடத்தையின் உற்பத்தியாக தொடர்பாடலின் வடிவமாக பரிணமித் துள்ளது. அவ்வகையில் இருமொழிய சமூகச் சூழலில் இணைந்து வாழும் மக்களது மொழி வடிவமானது அவர்களது சமூகக்கூட்டிணைப்பிற்கு ஏற்ப மாற்றத்திற்குள்ளாக்கப்படுவது இயல்பு. அந்த வகையில் இவ்வாய்வானது இலங்கையில் தமிழ்-சிங்கள மக்கள் இணைந்து வாழும் இருமொழிய பிரசேங்களில் தமிழ் மொழியினை முதல் மொழியாகக் கொண்டவர்க ளது மொழிப்பிரயோகங்களில் ஏற்பட்டுள்ள மொழி மாற்றங்களை கண்டறிந்து அவற்றைப் பகுபாய்வு செய்வதன் மூலம் மொழியியல் கூட்டிணைப்பின் மாற்றங்களை நிறுவிக்காட்டுவ தனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ் வாய்விற்கான ஆய்வு முறையியலாக சமுதாய மொழியியல் அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது. முதல்நிலைத் தரவுகளானவை இரு மொழி பிரதேசங்களான அம்பாறை, இரத்தினபுரி, கண்டி, நுவரெலியா, சிலாபம், கொழும்பு, வவுனியா ஆகிய இடங்களைச் சேர்ந்த 50 பல்கலைக்கழக மாணவர்களிடம் மேற்கொள்ளப் பட்ட கலந்துரையாடல், வினாவிடை அவதானிப்பு ஆய்வுமுறைகள் என்பவற்றின் ஊடாக திரட்டப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக மொழி மாற்ற இயல்புகள் தொடர்பில் ஏற்கனவே வெளிவந்த ஆய்வுக்கட்டுரைகள், புத்தகங்கள் என்பன எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன. இவ்வாறான நெறிமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி இலங்கையில் தமிழ்-சிங்கள இருமொழிய சமூகச் சூழலின் விளைவாக அச்சமூகச்சூழலில் வாழும் தமிழர்களது தமிழ் மொழிக்கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மொழி மாற்ற இயல்புகளா னவை மொழியியல் ரீதியில் வகைப்படுத்தப்பட்டு, மொழியியல் கூட்டிணைப்பின் மொழிமாற்ற இயல்புகளானவை பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் முன்வைக்கப் பட்டுள்ளதுடன் அவற்றுக்கான காரணங்களும் விளைவுகளும் பகுப்பாய்வினடிப்படையில் முன் மொழியப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் :** இருமொழியச் சூழல், மொழி மாற்ற இயல்புகள், தமிழ்-சிங்கள சமுதாய-மொழியியல் கூட்டிணைப்பு, சமுதாய மொழியியல்

## அறிமுகம்

மொழி என்பது மற்றவர்களோடு எமக்குள்ள தொடர்பை பாதுகாத்து அதனை வளர்க்கப் பயன்படும் சமூக நிகழ்ச்சி (முத்துச்சண்முகன், 1998 : 13). ஆனால் அது மனிதப்பிறப்பின் போதே உடன் வந்த திறமையல்ல. மொழியானது ஏனையவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளப்படுகிறது. எனினும் முதல் மொழியைப் பொறுத்த வரையில் தலைமுறைகளின் ஊடாக கடத்தப்படுவதன் வாயிலாக மொழி கற்றுக் கொள்ளப்படுவதிலும் பார்க்க மொழித் தேட்டமாக உள்வாங்கப்படுகிறது எனக்கூற முடியும். அந்தவகையில் பேச்சு மொழி என்பது தோற்றத்திலும் வளர்ச்சியிலும் பயன்படும் முறையிலும் மிக முக்கிய சமூக நிகழ்ச்சி. எனவேதான் மொழியினை ஒரு செய்திப்பரிமாற்றக் கருவியாக மட்டுமல்லாமல் சொம்ஸ்கி கூறுவது போல் உள்மனச் செயற்பாடுகளை வெளிப்படுத்திக் காட்டும் கண்ணாடி எனவும் குறிப்பிடலாம். (Chomsky,1968 :1).

இவ்வகையில் மொழியானது சமுதாயத்தில் வாழும் மனித இனத்தின் முன்னேற்றம், வரலாறு, பண்பாடு, வாழ்வியல், சமுதாய நிலை, பொருளாதார நிலை போன்றவற்றை வெளிப்படுத்துவதன் ஊடாக மொழிக்கூறுகளுக்கும் (linguistic factors) சமூகக்கூறுகளுக்குமிடையே (social factors) நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்துகின்றது.

சமுதாய-மொழியியல் தொடர்பினை, மொழி பேசும் அனைத்து சமுதாயங்களிலும் அவதானிக்கலாம். அத்துடன் பல்வேறு மொழிகளும், கிளைமொழிகளும் அந்தந்த இனத்தின் சூழ்நிலை, பண்பாடு, நாகரிகம் போன்றவற்றின் இயல்பிற்கேற்ப மக்களால் பிரயோகிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக மொழிகளின் கிளை மொழிகளிலே காணப்படும் பிரதேச, சமூகக்கிளைமொழி வேறுபாடுகளைக் குறிப்பிடலாம். அதேநேரம் மொழி பேசும் சமுதாயங்களுக்கிடையே ஏற்படும் சமுதாயக் கூட்டிணைப்பினால் (social acculturation) மொழியமைப்பிலும் ஒருவகையான நெகிழ்ச்சி (diffusion) ஏற்பட்டு மொழியியல் கூட்டிணைப்பு (linguistic acculturation) தோன்றுவதனையும் அவதானிக்க முடியும்.

இவ்வாறே வெவ்வேறு மொழிகளைப் பேசுபவர்கள் நேரடியாக தொடர்பு கொள்ளும்போது அவரவர் மொழிகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இங்கு பேச்சு மொழியைப் பொறுத்த வரையில் ஒருவர் மொழி மற்றவர் மொழியை ஏதோவொரு வகையில் செல்வாக்கிற்குட்படுத்தலாம். ஆனால் நூலளவில் மட்டும் இருக்கும் எழுத்துமொழியொன்றின் மீது வாசிப்பவரால் தனது செல்வாக்கிற்கு உட்படுத்திவிட முடியாது.

இலங்கையில் தமிழ் - சிங்கள மொழிகளின் தொடர்பினைப் பொறுத்த வரை இவ்விரு மொழிகளுமே பல நூற்றாண்டுகளாக அருகருகே வாழ்ந்த மொழிகள். பொதுவான கருத்தின்படி இந்தியாவின் வட பகுதியிலிருந்து சிங்கள மொழியும் தென் பகுதிகளிலிருந்து தமிழ் மொழியும் வருகை தந்திருந்த போதிலும் அவற்றின் வருகைக்கான காலப்பகுதிகள் நிறுவப்படவில்லை எனவும் அதேபோல இவ்விருமொழி அறிவு பெற்ற மக்கள் சமுதாயம் வாழ்ந்ததாக கூறப்படுகின்ற போதிலும் அம்மக்கள் தொகை பற்றி கூறுவதற்கு ஆதாரங்கள் இல்லை என்கிறார் பேராசிரியர் சுசீந்திரராஜா (Suseendirarajah, S, 1999: 433). எனினும் தமிழ்மொழிக்கும் சிங்கள மொழிக்கும்

இடையில் இருநிலைத் தொடர்பின் விளைவினால் தமிழ் மொழியின் செல்வாக்கு குறிப்பிடத்தக்களவிற்குச் சிங்கள மொழியில் பரவியுள்ளது என்பது தொடர்பில் Wimal G. Balagalle (1998), Mendis Gunasekara.A (1891), Gunawardana.W (1924), and Swami Gnana pragasa (1936) போன்றோரது ஆய்வுகள் சான்றாதாரங்களை வழங்கியுள்ளன (Wimal, S, 2006 : 4-6). அவ்வகையில் உறவுமுறைப்பெயர்கள், உடல் உறுப்புக்களின் பெயர்கள், உழவுத் தொழில் சார்ந்த பெயர்கள், அளவுப் பெயர்கள், உணவுப்பெயர்கள், பொருட்களின் பெயர்கள் போன்றவற்றில் தமிழ்ச் சொற்கூறுகளை சிங்கள மொழியில் அவதானிக்கலாம்.

இந்நிலையில் இலங்கைத் தமிழ் மொழியில் சிங்கள மொழியின் செல்வாக்கு என்றோ, தொடர்பு என்றோ விதந்து கூறுமளவிற்கு தமிழ் மொழியின் சொற்களஞ்சியங்களில் சான்றுகளைக் காணமுடியவில்லை.

இலங்கையின் சுதந்திரத்திற்கு பின்னராக ஏற்பட்ட குடியமர்த்தல்களின் விளைவாகவும் மக்களது முன்னேற்றம் கருதிய பெருநகரங்களை நோக்கிய நகர்வுகளின் விளைவாகவும் தமிழ் மொழியின் கட்டமைப்புகளுக்குள் சிங்கள மொழியின் கூறுகள் உள்நுழைந்துள்ளதனை இரு மொழிய சமுதாயக்கட்டமைப்புகளுக்குள் வெகுவாக அவதானிக்கக்கூடியதாக உள்ளது. எனவே இவ்வாய்வானது இலங்கையில் தமிழ்-சிங்கள மக்கள் இணைந்து வாழும் இருமொழிய பிரசேங்களில் தமிழ் மொழியினை முதல் மொழியாகக் கொண்டவர்களது மொழிப் பிரயோகங்களில் ஏற்பட்டுள்ள மொழி மாற்றங்களை கண்டறிந்து அவற்றை பகுபாய்வு செய்து வெளிப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இங்கு தமிழ்மொழியில் சிங்கள மொழிக் கூறுகளின் உள்நுழைவுகளை, ஏனைய வடமொழி, ஒல்லாந்து, போர்த்துக்கேயம், ஆங்கிலம், போன்ற பிற மொழிகளின் கலப்புகளோடு சேர்த்து ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. ஏனெனில் இம்மொழிகளின் மொழிக்கலப்புகளுக்கான காரணங்களாக கௌரவ நோக்கம் மற்றும் தேவை நோக்கம் என்பனவாக உள்ளன. ஏனைய சில மொழிக்கலப்புகள் மொழி ஆதிக்கத்தின் விளைவாகவும் ஏற்பட்டுள்ளன.

தமிழ் - சிங்கள மக்கள் அம்பாறை, இரத்தினபுரி, கண்டி, நுவரெலியா, சிலாபம், கொழும்பு, வவுனியாவில் தேக்கவத்த, மூன்றுமுறிப்பு போன்ற இடங்களில் பல ஆண்டுகள் தொடர்ச்சியாக இருமொழியச் சூழலில் வாழ்ந்து வருகின்றனர். இவ்விரு மொழிகளை சூழ்நிலைக்குத் தகுந்தவாறு வேண்டிய மொழிகளை மாற்றி, மாற்றி பேசியதன் விளைவாகவும் இவ்விடங்களில் வாழும் தமிழ் மக்கள் இன்று தமது வீட்டு மொழிக்குள்ளேயே அதாவது தமிழ்மொழித் தொடர்பாடலிற்குள்ளேயே சிங்கள மொழியின் கூறுகளை பிரயோகித்து வருவதனை ஒலியியல், உருபனியல், சொற் பொருளனியல், தொடரியல், வாக்கியவியல் கூறுகளின் அடிப்படையில் தரவுகளைத் திரட்டி பகுப்பாய்வு செய்ய முடிந்துள்ளது.

சமுதாய மொழியியல் என்பது சமூகத்தின் எல்லா அம்சங்களிலும் மொழி ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் பற்றி ஆய்வு செய்வதனை நோக்கமாகக் கொண்ட துறையாகும். அவ்வகையில் இவ்வாய்வில் இருமொழிய சமூகச்சூழலினால் குறித்த ஒரு மொழியாளர்களுக்கிடையே மொழி

மாறும் இயல்புகள் பற்றி தமிழ் - சிங்கள மொழிகளை அடிப்படையாக் கொண்டு தகவல்கள் திரட்டப்பட்டு பகுப்பாய்வின் அடிப்படையில் முன்வைக்கப்படுகின்றன.

## மொழிமாறும் இயல்புகள்

Code- switching என்பது குறித்தவொரு உரையாடலில் இடம்பெறும் மொழி வகைகளினுடைய மாற்றமாகும் -"the alternation of linguistic varieties within the same conversation"( Myers-Scotton,1993:1).

அதாவது குறித்தவொரு சமுதாயத் தினரால் பயன்படுத்தப்பட்டுவரும் ஒரு மொழி வழக்கானது, குறித்த சில சமுதாயச் சூழ்நிலைகளில் அம்மொழி வழக்கிலிருந்து இன்னொரு மொழி வழக்கிற்கு மாறுகின்ற போது அத்தகைய சந்தர்ப்பத்தினை மொழி மாறும் இயல்பு நடத்தை அல்லது மொழிக் குறியீடு மாற்றம் (code-switching behaviour) எனலாம். இவ்வியல்பு நடத்தை ஊடாக மொழி பேசும் சமுதாயத்தினரின் மொழியின் பாற்பட்ட மனப்பாங்குகள் எவ்வாறுள்ளன என்பதனை அறிந்து கொள்ளக்கூடியதாக அமையும்.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளை மாற்றுவதற்கான அல்லது இணைப்பதற்கான குறிப்பிட்ட மொழியியல் செயலையும் இது குறிக்கிறது. மொழிக் கூறுகளை ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மாற்றுதல் என்பது ஒரு உளவியல் செயல்முறையாகும். ஒரே நாளில் சராசரியாக நாம் எத்தனையோ தடவைகள் மொழிக்குறியீடுகளை மாற்றுகின்றோம். ஆனால் அதை நாம் உணர்வதில்லை.

அத்தோடு மொழி மாறும் இயல்பானது பிரதானமாக பின்வரும் வகைகளினூடாகவே நடைபெறுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். (Kebeya, H,2013 : 228-233).

* Inter sentential switching - பேசுபவர் வெவ்வேறு வாக்கியங்களுக்கிடையில் ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மொழிக்கூறுகளை மாற்றுவாராயின் அது Inter sentential switching எனப்படும்.
(a speaker switches from one language to another between different sentences).

* Intra sentential switching - இங்கு பேசுபவர் ஒரே வாக்கியத்தினுள்ளேயே ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மொழிக் குறியீட்டை (இலக்கண மற்றும் சொல்லியல் கூறுகளை) மாற்றுவாராயின் அது Intra sentential switching எனப்படும்.
(speakers switch from one language to another within the same sentence).

* Tag switch sentential - இதன்போது ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு வாக்கிய தொடர்கள், சொற்கள் அல்லது இரண்டும் மாற்றப்படுவதாகும்.
(Tag-switching is the change in a tag phrase, word, or both, from language B to language A).

* Intra word switching - பேசுபவர் ஒரு சொல்லிற்குள்ளேயே உள்ள கூறுகளிற் கிடையில் ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மாற்றுவாராயின் அது Intra word switching எனப்படும். (Intra-word switching, in which a change occurs within a word boundary, such as in shoppā - English shop with the Panjabi plural ending or kuenjoy (English enjoy with the Swahili prefix ku, meaning 'to').

இம் மொழிமாறும் இயல்பானது அல்லது மொழிக் குறியீடுகளின் மாற்றமானது பின்வரும் வழிமுறைகளினூடாக நடைபெறு கின்றது.

* Lexical borrowing - சொற்களைக் கடன் வாங்குதல்
* Loan shift - கடன் பெயர்வு
* Loan translation - கடன் மொழி பெயர்ப்பு
* Tautologies - ஒரு பொருட்சொல்லடுக்கு அல்லது கூறியது கூறல்
* Code switching - மொழி மாற்றம்
* Code mixing - மொழிக் கலப்பு

இரு மொழிகளை இணைத்துப் பேசுவது portmanteau என வழங்கப்படுகின்றது. உதாரணமாக ஆங்கில மொழியுடன் ஏனைய மொழிகளை இணைத்து பயன் படுத்துவதை,

* Tanglish – Tamil + English
* Chinglish – Chines + English
* Singlish – Sinhala + English
* Hinglish – Hindi + English
* Benglish – Bengali + English

எனப் பெயரிடுகின்றனர்.

ஒருமொழியாளர்களிடையே மொழி மாறும் இயல்புகள் என்பன ஆர்னோவ், மில்லர் கூறுவதன்படி,

"many linguists have stressed the point that switching between languages is a communicative option available to a bilingual member of a speech community, just as switching between styles or dialects is an option for the monolingual speaker"

அதாவது இருமொழிய சமூகத்தில் உள்ள ஒருவருக்கு மொழிகளுக்கிடையில் மொழிமாறும் இயல்பென்பது அவரது தொடர்பாடலின் விருப்பத்தெரிவாக கிடைக்கக்கூடிய ஒன்றாக இருக்கும் என்பது டன் ஒரே மொழியாளர்களுக்கிடையில் அம் மொழியின் கிளைமொழிகளுக்கிடையிலும் மொழிநடைகளுக்கிடையிலுமான மொழி மாறும் இயல்பானது குறித்த மொழியாளரது விருப்பத்தெரிவாக இருக்கும் என்பதாகும் (Aranoff and Miller, 2003:523, as cited by Esen,2019:2).

இருமொழி வழக்கு நிலையில் ஒரு மொழியின் ஆதிக்கம் இருக்கும் போது இத்தகைய மொழி மாறும் இயல்பு ஏற்படுவது வியப்பல்ல. இரு மொழிகளில் எந்த மொழி அந்தஸ்து பெற்றதாக விளங்குகின்றதோ அந்த மொழி மற்றைய மொழியில் மொழிமாறும் இயல்பினை ஏற்படுத்தும். ஆனால் தமிழ் - சிங்கள மொழித்தொடர்புகளைப் பொறுத்த வரையில் ஆதிக்க நிலை என்பதிலும் பார்க்க நீண்ட கால மொழித்தொடர்பின் விளைவினால் மொழிக் கூட்டிணைப்பின் வழியாக மொழியியல் இடையீடுகள் ஏற்பட்டுள்ள தனை இருமொழிய சூழலில் வழங்கும் தமிழ் மொழிப் பிரயோகத்தில் அவதானிக்க முடிகிறது. இவை மொழி பேசுபவர்கள் தம்மையறியாமல் மொழிக் கூறுகளை அதிகம் பிரயோகித்ததன் விளைவாக இருக்கலாம். இதன் அடிப்படையில் மொழியியல் இடையீடுகளும்கூட பெரும் பான்மை மொழியின் செல்வாக்கினால் ஏற்பட்டதாக எடுத்துக்கொள்ள முடியும்.

ஒரு மொழிவழக்கு சமுதாயத்திலும்கூட மொழிமாறும் இயல்பு தன்னிச்சையாக ஏற்பட்டு விடுவதை இயல்பான மொழித் தொடர்பாடலின்போது காண முடிகிறது. உதாரணமாக நமது பேச்சு வழக்கில்

"Excuse me நான் உள்ளே வரலாமா?, நீங்கள் எங்கே போகிறீர்கள்? can I come with you?" போன்ற மொழிப்பிரயோகங்கள் இருமொழிய சூழல் இல்லாத சந்தர்ப்பங் களில் இடம்பெறும் மொழிமாறும் இயல்பு களை காட்டுகின்றன.

இவ்வாறு பிறமொழி பேச வேண்டிய சூழல் இல்லாவிடினும் நாம் அம் மொழியி னைப் பயன்படுத்துவது அதாவது குறித்த இடத்தில் அம் மொழிப்பிரயோகத்தினை கொண்டுவருவது என்பது அம்மொழியின் மீதான மக்களது மனப்பாங்கினைத் தெளிவாகக் காட்டுகின்றது.

இவ்வாறான ஆங்கில உபயோகங்களை, தமது எண்ணத்தினை வலியுறுத்துவதற்கு ஏதுவாக மேற்கொள்கின்றனர். இவ்வாறு மொழிமாறும் இயல்பு எவ்வகைச் சமுதாயச் சூழலில் தோன்றுகின்றது என்பது அச் சூழலில் பங்கு கொள்வோரின் மொழி வழக்கு, இடம் போன்ற பலவற்றைப் பொறுத்து அமைகிறது.

## ஆய்வின் ஊடாக கண்டறியப்பட்டவைகள்

தமிழ் - சிங்கள இருமொழியச்சூழலில் தொடர்ச்சியான இருமொழியத்தொடர்பின் காரணமாக இருமொழியச்சூழல் இல்லாத சந்தர்ப்பங்களிலும் கூட தமிழ் மொழித் தொடர்பாடலில் மொழிமாறும் இயல்புகள் ஏற்பட்டுள்ளதனை ஆய்வின் தரவுப்பகுப் பாய்வு வெளிப்படுத்தியுள்ளது. அதாவது இரு மொழியச்சூழலில் வாழும் தமிழ் மக்களது அன்றாட மொழிப் பிரயோகங்களில் சிங்கள மொழிக் கூறுகள் ஒலியியல், சொல்லியல், சொற்பொருளனியல், வாக்கியவியல் என்ற வகைப்பாடுகளின் அடிப்படையில் மொழி மாறும் இயல்புகளை ஏற்படுத்தியுள்ளன.

### 1. ஒலியியல் அடிப்படையிலான மொழி மாறும் இயல்புகள்

ஒவ்வொரு மொழியும் தனக்கேயுரிய தனித்துவ ஒலிகளையும் ஒலிக்கட்ட மைப்புக் களையும் கொண்டுள்ளது. அவ்வகையில் ஒலியியல் அடிப்படையிலான மொழிமாறும் இயல்புகள் என்பது ஒருவர் ஒரு மொழியில் பேசுகின்ற போது அவர் தனது அயல் மொழி யின் உயிரொலி, மெய்யொலி, தொனி, உயிரிணை, மெய்யிணை போன்ற வற்றினை தமது மொழியின் முதல், இடை, கடை நிலைகளில் பின்பற்றுதலைக் குறிக்கும்.

அந்த வகையில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகள் இருமொழிய சூழல்களில் பயன் படுத்தப்படுவதன் விளைவாக மொழிமாறும் இயல்புகளை அடையாளப்படுத்த முடிந் துள்ளது. இவ்வாய்வின் தரவுப்பகுப் பாய்வின்படி தமிழ் மொழியில் தாக்கம் செலுத்தும் சிங்கள மொழியின் ஒலியியல் கூறுகளாக பின்வருவன கண்டறியப் பட்டுள்ளன.

1. தமிழ் மொழியின் இரட்டிப்பு ஒலி உச்சரிப்பிற்கு பதிலாக சிங்கள மொழியின் உச்சரிப்பினை தழுவி உச்சரித்தல்.

உதாரணம் : ரொட்டி (roṭṭi) என்பதற்கு பதிலாக ரொடி (roṭi) சாப்பிடுங்க

2. சிங்கள மொழியின் ஒலிப்புள்ள தடை ஒலிகளை மொழி முதலில் உச்சரித்தல் மற்றும் மூச்சுநிறை ஒலிகளை தமிழ்மொழி உச்சரிப்பில் பிரயோகித்தல்.

அதாவது தமிழ் மொழியில் ஒலிப்பற்ற தடையொலிகளே மொழி முதலில் இடம் பெறுவது வழமை. ஆனால் இரு மொழிய சமூகத்தினரிடையே ஒலிப்புள்ள ஒலிகள் மொழி முதலிலும் மூச்சு நிறைப்பண்பில் ஒலிக்கின்ற சந்தர்ப்பங்களையும் அவதா

னிக்க முடிந்துள்ளது. சிங்கள மொழியில் மூச்சு நிறை ஒலிகள் எழுத்து வழக்கில் மட்டுமே உள்ளன அம்மக்களது பேச்சில் முற்றாக இல்லை எனக்கூறிவிட முடியாது. சிங்கள மக்களது தொடர்ச்சியான பேச்சின் போது மூச்சுநிறைப் பண்பின் அழுத்தம் குறையுமே தவிர அப்பண்பு முற்றுமுழுவதுமாக ஒலிப்பில் தவிர்க்கப்படுவது இல்லை.

அதாவது /d̲ʰ/ என்ற ஒலிப்புள்ள மூச்சுநிறை ஒலிப்பு தமிழ் மொழியில் இல்லை. ஆனால் பேச்சு வழக்கில் சில சொற்களை உச்சரிக்கின்ற போது இத்தகைய ஒலிப்புகளை குறித்த பிரதேச தமிழ் மக்கள் தமது மொழிப்பயன்பாட்டில் கொண்டுள்ளதனை அடையாளங்காண முடிந்துள்ளது.

உதாரணம்:-

* d̲ʰanavat̲- தனவந்தன்- இருமொழிய பிரதேச தமிழ் மொழியாளரது உச்சரிப்பு விதம் - d̲ʰa:nəvant̲an
* d̲ʰairiya -தைரியம்- இருமொழிய பிரதேச தமிழ் மொழியாளரது உச்சரிப்பு விதம்- d̲ʰairiyam
* rampʰe -ரம்பை - இருமொழிய பிரதேச தமிழ் மொழியாளரது உச்சரிப்பு விதம் - rampʰa

இத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்ற போது இச்சொற்கள் உச்சரிப்பு, பொருள் போன்றவற்றில் தமிழ் மொழியுடன் ஒற்றுமைப்பண்பைக் கொண்டுள்ளன. எனினும் சிங்கள மொழியின் உச்சரிப்பினையே இருமொழி சூழலில் வாழும் தமிழ் மக்கள் பின்பற்றுகின்றனர்.

3. சிங்கள மொழியில் காணப்படுகின்ற குறித்த சில சொற்களின் நிறைவு ஒலிகளே தமிழ் மொழித் தொடர்பாடலிலும் உச்சரிக்கப்படுகின்றன.

உதாரணம்:-

* paalamə - பாலம - பாலம்
* vaḍe: - வடே - வடை
* d̲oḍaŋga: - தொடங்கா - தோடம்பழம்
* peṭṭiyə - பெட்டிய - பெட்டி

இவ் எடுத்துக்காட்டுகளின் அடிப்படையில் ஆய்வு செய்கின்ற போது இச்சொற்கள் தமிழ் - சிங்கள மொழிகளில் ஒரே மாதிரியான ஒலிப்பினை கொண்டுள்ளமையினால் மக்களது தொடர்பாடலில் முதல் மொழிச் சொல்லின் இறுதியில் ஒலி இழப்பு மேற்கொள்ளப்பட்டதன் மூலம் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இவற்றை உருபனியல் அடிப்படையிலான இடையீடுகளாகவும் இனங்காட்ட முடியும். அதாவது intra-word switching - ஒரு சொல்லிற்குள்ளேயே உள்ள மொழிக் கூறுகளை ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மாற்றுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2. சொல்லியல் அடிப்படையிலான மொழி மாறும் இயல்புகள்

மொழியியல் கூறுகளில் முக்கியமான ஒன்றாக சொல் காணப்படுகின்றது. ஒலிகள் தனித்தோ சேர்ந்தோ பொருள் தருமாயின், அதனை சொல் என்கின்றோம். இருமொழி வழக்கு காணப்படுகின்ற பிரதேசங்களில் ஒரு மொழியில் பயன்படுத்தப்படுகின்ற சொற்கள் இன்னொரு மொழியிலும் பயன்படுத்தப்படுகின்ற நிலை காணப்படுகின்றது. இவ் அடிப்படையில் தமிழ்-சிங்கள இருமொழிய உறவினால் தமிழ் மொழித் தொடர்பாடலின் போது அவர்கள் சிங்கள மொழிச் சொற்களை அம்மொழியின் உச்சரிப்பில் எவ்வித மாற்றமும் இன்றி இயல்பாக பயன்படுத்துகின்றமையினை அவதானிக்க முடிந்துள்ளது. இவை மொழிமாறும் நடத்தையில் மொழிக் கலப்புகளாக வெளிப்படுத்தப்படுகின்றன.

சிங்கள மொழியில் பயன்படுத்தப்படுகின்ற அநேக சொற்கள் தனித்த தமிழ் மொழிச்சூழலில் பயன்படுத்தப்படுகின்றன. அவை அன்றாட வாழ்வில் பயன்படுத்தப் படுகின்ற பொருட்கள், உணவு வகைகள், ஆடைகள் போன்றவற்றுடன் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன.

உதாரணம்:

1. உணவுகள்

* ač̌ča:Ru - அச்சாறு
* kæ:li miris - கேலிமிரிஸ் (துண்டு மிளகாய்)
* elabaṭu - எலபட்டு (சுண்டக்காய்)
* kiṯulpæni - கிதுல்பெணி (கிதுல்பாணி)
* væliṯalapa - வெலிதலப (இனிப்பு பண்டம்)
* goṭu kola - கொடுகொல (வல்லாரை)
* pol toffee - பொல்டொபி (தேங்காய் டொபி)
* kiri toffee - கிரிடொபி (பால் டொபி)
* ma:lu ban - மாலுபண் (கறிபண்)
* palaṯuRu - பழதுரு (பழங்கள்)

2. பொருட்கள்

* puṭuva - புட்டுவம் (கதிரை)
* me:saya - மேச (சை)
* væli kaḍaḏa:si - வெலி கடதாசி (மணற் கடதாசி)
* simiṯi - சிமிதி (சீமெந்து)

இவ்வாறான பல சிங்கள மொழிச் சொற்கள் இருமொழிய தொடர்பிலிருக்கும் தமிழ் சமுதாயத்தினரது அன்றாட வாழ்வில் சிங்கள மொழி உச்சரிப்பில் எவ்வித மாற்றமும் இன்றி சாதாரணமாக பிரயோகிக் கப்படுகின்றன. இது இம்மக்களது சமுதாய-மொழியியற்கூட்டிணைப்பினை வெளிப் படுத்துகின்றது.

மேலும் சிங்களமொழிச் சொற்களில் சில ஒலிகள் தோன்றியோ, கெட்டோ, திரி படைந்தோ பயன்படுத்தப்படுகின்ற நிலையினை அவதானிக்க முடிகிறது. உதாரணமாக: புட்டுவம் - puṭuvə, கவுன் -gavmə.

இவற்றை ஆய்வு செய்கின்ற போது சொற்களில் சில தமிழ், சிங்கள மொழிகளில் கலந்த அந்நிய மொழிச் சொற்கள் சிலவே இவ்வாறான சிங்கள மொழி உச்சரிப்பில் பயன்படுத்தப்படுகின்றன. ஏனையவை சிங்களமொழிக்கே உரியவை தமிழ் மொழியாளர்களால் தமது வீட்டு மொழியில் பயன்படுத்துவனவாக அடையாளங்காணப்பட்டுள்ளன. அந்த வகையில் அவை மொழிமாறும் இயல்புகளில் மொழிக் கலப்புகளாக வெளிப்படுகின்றன. இன்னொரு வகையில் இதனை tag-switch sentential - வாக்கியங்களுக் கிடையில் மேற்கொள்ளப்படுகின்ற மொழி மாற்றமாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

### 3. சொற்பொருளனியல் அடிப்படையிலான மொழிமாறும் இயல்புகள்

தமிழ்-சிங்கள மொழிகளுக்கிடையேயான நீண்டகால இருமொழிய உறவின் காரணமாக சொற் பொருளனியல் அடிப் படையிலும் மொழிமாறும் இயல்புகளை இனங்காண முடிந்துள்ளது. அதாவது தமிழ் மொழிப்பிரயோகத்தில் சிங்கள மொழிக்கட்டமைப்புகள் கலந்து சிங்கள மொழிச் சொல்லின் நேரடிப் பொருளை தமிழில் மொழிபெயர்த்து தமிழ் மொழித் தொடர் பாடலில் பிரயோகிக்கின்றனர். இதனால் தமிழ்மொழிப் பொருட்கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக:

* எனக்கு கோவம் போகுது - இப் பொருத்தமற்ற வினைப் பயன்பாடு - maṭə ṯaraha yanəva என்பதன் நேரடி மொழிபெயர்ப்பாகும்.
* விளக்கு பற்றவைக்கிறேன் - (ஏற்றுக் கொள்ளக்கூடியது) எனினும் விளக் கேற்றுகிறேன் என்பதே மிகப்பொருத் தம்-இது pahana paṯṯu kərənəva என்பதன் நேரடி மாற்றம்.

இவ் அவதானிப்புகளின் அடிப்படையில் ஆய்வு செய்கின்றபோது இருமொழிய சூழலில் வாழும் தமிழ் மக்கள் ஆழமாகவே சிங்கள மொழிக்கூட்டிணைப்பினுள் உள்வாங் கப்பட்டுள்ளமையினை கண்டறிய முடிந்துள் ளது. இதனை code - changing caused by direct translation எனப்பெயரிடுவது பொருத்தமானதாக இருக்கும்.

#### 4. வாக்கியவியல் அடிப்படையில் மொழி மாறும் இயல்புகள்

தமிழ் - சிங்கள இருமொழிய பிரசேங்களில் சமூகக் கூட்டிணைப்பானது பல்வேறு மொழிக் கூட்டிணைப்புக் கட்டமைப்புகள் ஊடாக வெளிப்படுத்தப்படுவதனை வாக்கியவியல் அடிப்படையில் அடையாளப்படுத்த முடிகிறது. இவை தமிழ் மொழியாளர்களது அன்றாட வாக்கிய பயன்பாடுகளிலே அவதானிக்கப் பட்டுள்ளன.

1. தமிழ்மொழி வாக்கியக்கட்டமைப்பில் சிங்களமொழிச் சொற்களின் கலப்புகள்

1. நான் வேப்பிலை ஒரு குலி (guli) சாப்பிட்டேன்.

இவ்வாக்கியத்தில் 'உருண்டை' என்ற தமிழ் சொல்லுக்குப் பதிலாக guli என்ற சிங்களச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளமையைக் காணலாம்.

2. கொட(goḍa) குப்ப கொட்டிக் கெடக்கு. இந்த வாக்கியத்தில் 'நிறைய' என்ற தமிழ் சொல்லுக்குப் பதிலாக பழடிய என்ற சிங்களச் சொல் பயன்படுத்தப்பட்டுள் ளது.
3. அவுருது உத்சவயத்துக்கு (avuRuḏu uṯsavaya) போறிங்களா? இவ்வாக்கியத்தில் 'புதுவருட கொண்டாட் டம்' என்ற தமிழ் சொல்லுக்குப் பதிலாக avuRuḏu uṯsavaya என்ற சிங்களச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.
4. கறிக்கு சுப்கெட்ட (su:p kæṭə) போடுங்க. இவ்வாக்கியத்தில் 'சூப்கட்டி' என்ற தமிழ் சொல்லுக்குப் பதிலாக su:p kæṭə என்ற சிங்களச் சொல் பயன்படுத்தப்பட்டுள் ளமையைக் காணலாம்.
5. கெலிம (kelima) போகத்தான் வேணும் - நேராக போகத்தான் வேணும்
6. அனிவார(ங்) (anivaaraŋ) செய்வோம் . கண்டிப்பாக செய்வோம்
7. கமபொடியன்கள் (gama) வருவாங்கள் - CH பெடியன்கள் வருவார்கள்
8. பிட்டனிக்கு போவம் (piṯṯaniya) - மைதானத்திற்கு போவோம்.
9. புடுவத்த எடுங்கோ (puṭuvə) - கதிரையை எடுங்கோ

இவ்வாறாக தமிழ் வாக்கியக் கட்டமைப்பு களின் போது சிங்களமொழிச் சொற்களின் கலப்புகள் இயல்பாக இடம்பெற்று வருகின் றன. இவையனைத்துமே Intra sentential switching அடிப்படையில் வாக்கியத்தி னுள்ளேயே மொழிக்குறியீடுகள் மாற்றப் பட்டுள்ளன.

2. தமிழ் மொழித் தொடர்பாடலின் போது சிங்கள மொழித் தொடர்களின் இடையீடு கள்

அதாவது தமிழ் மொழி உரையாடல்களின் போது சிங்கள மொழியின் குறித்த சில தொடர்களை தமிழ் மக்கள் அடிக்கடி பிரயோகிப்பதனையும் அவதானிக்க முடிந்துள்ளது. உதாரணமாக: தம்மிடையே உரையாடிக்கொண்டிருக்கும் போது

* kiyala vædak næ: - சொல்லி வேலையில்லை
* ha hari hondai - ஓம் சரி நல்லம்
* pissudə? - பைத்தியமா?
* boru kiyanda epa: - பொய் சொல்ல வேண்டாம்

போன்ற தொடர்களை தம்மையறியாது மொழி மாற்றி பிரயோகிக்கின்றனர். இத்தகைய மொழி மாற்றங்களை inter - sentential switching ஆக அதாவது தமது மொழியில் ஒரு வாக்கியத்தினை கூறிய பின்னர் இத்தொடர்களை அல்லது சிறு வாக்கியங்களை பிரயோகிக்கின்றனர்.

தமிழ் - சிங்கள வாக்கிய அடிப்படையிலான மொழி மாற்ற இயல்புகளை ஆய்வு செய்கின்ற போது அவை வாக்கிய கட்டமைப்பில் Inter- sentential switching and Intra- sentential switching - ஒரே வாக்கியத்தினுள்ளேயே ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மொழிக் குறியீட்டை மாற்றுதல் மற்றும் பேசுபவர் ஒரு சொல்லிற்குள்ளேயுள்ள கூறுகளிற்கிடையிலேயே ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மாற்றுதல் போன்றவற்றினூடாக மொழி மாற்றங்கள் இடம் பெற்றுள்ளதாக குறிப்பிட முடியும்.

**ஆய்வின் அடிப்படையில் மொழிமாறும் இயல்புகள் ஏற்படுவதற்கான காரணங்கள்**

இனங்காணப்பட்ட மொழிமாற்ற வகைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, இருமொழிவழக்கு நடைமுறையிலுள்ள இடங்களிலோ அல்லது சமுதாயங்களிலோ மொழிமாறும் இயல்புகள் ஏற்படுவதற்கு பின்வருவனவற்றை அடிப்படைக் காரணங்களாகச் சுட்டிக்காட்ட முடியும்.

1. தமிழ் மொழிமூல உரையாடலின் போது சிங்கள மொழித்தொடர்கள் குறித்த சில கருத்தை அழுத்தமாக சொல்வதற் இலகுவானதாக அமைதல்.
2. தமிழ் மக்கள் குறித்த பிரதேசத்தில் அந்நியோன்னியமாக வாழ்வதன் காரணமாக இருக்கலாம்.
3. இரு மொழிய சூழலில் எந்நேரமும் சிங்கள மொழியினை செவிசாய்த்துக் கொண்டிருந்ததன் காரணமாக அமையலாம்.
4. தொடர்பாடலின் போது செய்திப் பரிமாற்றத்தின் ஆற்றலை உணர்த்துவதாக மற்றும் தெளிவை ஏற்படுத்துவதற்காக ஏற்படலாம்.
5. குறித்த சந்தர்ப்பத்தில் மற்றையமொழி அவசியமானதாக அல்லது விருப்பத்தெரிவாக இருக்கும்போது ஏற்படலாம்.
6. ஒருவரது பேச்சினை கேட்பவர்களுக்கு குறிப்பிட்ட சில சொற்களையோ, கருத்துக்களையோ புரிந்து கொள்வதில் சிரமம் இருக்கும்போது அல்லது ஒரு மொழியில் பொருத்தமான சொற்களை பேச்சாளர் அறிந்திருக்கவில்லை என்றால் அல்லது நினைவில் வராத போது மொழிமாறுதல் ஏற்படலாம்.
7. வீட்டு மொழியாக தமிழ் காணப்பட்ட போதிலும் அவர்களது சூழல் மொழியாக அதிகளவில் சிங்கள மொழியினை பயன்படுத்துவதன் காரணமாக அமையலாம்.
8. பொருளனியல் ரீதியிலான மாற்றங்களை பொறுத்தவரை தமிழ் மொழியினை விட சிங்கள மொழியே குறித்த நபரால் அதிகம் பிரயோகிக்கப்பட்டதன் விளைவாக இருக்கலாம்.

9. குறித்த மொழியில் தாம் தேர்ச்சி அடைந்துவிட்டோம் என்பதனை வெளிப் படுத்த தொடர்பாடலின் இடையில் மொழி மாற்றம் மேற்கொள்ளப்படலாம்.

10. எவரையேனும் தம் கட்டளைக்குட்படுத்த அல்லது உற்சாகப்படுத்தவும் மொழி மாறுதல் இயல்பு பிரயோகிக்கப்படுவ தாக அமையலாம்.

11. குறித்தவொரு விடயத்தினை இரகசிய மாக சொல்கின்ற வேளையிலும் மொழி மாறும் இயல்பு பிரயோகிப்படலாம்.

12. சிறப்புச் சொற்களஞ்சியங்கள் தேவைப் படுகின்ற போதும் பயன்படுத்தப்ப டலாம்.

13. குறித்த மொழியினைக் கற்றல்-கற்பித் தலின் விளைவாக ஏற்படலாம்.

14. பேச்சுச் சந்தர்ப்பத்தின் போது பேசப்படு கின்ற விடயம் குறித்த மொழியா ளர்களது சமூகம் தொடர்பான சம்பவ மாக இருக்குமெனில் கண்டிப்பாக மொழி மாறும் இயல்பு இடம்பெறலாம்.

போன்றவற்றை மொழிமாற்றம் ஏற்படுவ தற்கான காரணங்களாக ஆய்வின் மூலம் அடையாளப்படுத்த முடிந்துள்ளது.

**மொழிமாறும் இயல்புகளின் விளைவுகள்**

சமூகவியல் ரீதியாக மொழிமாற்ற இயல்பு என்பது எப்போதும் உருவாகி வரும் பன்முக கலாசார உலகில் ஏற்படுகின்ற இயல்பான விடயமாகும். இந்நிலை எமது தொழில்முறை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் முன்னேற அனுமதியளிக்கிறது. நுணுக்கமான அணுகு முறைகளையும் உணர்ச்சிகளையும் தெரிவிப் பதற்கும் சில விடயங்களை வலியுறுத்திச் சொல்வதற்கும் உதவுகிறது.

அதேநேரத்தில் மோசமான சூழ்நிலைக ளைத் தவிர்த்து இருமொழிய சூழலில் தகவல் தொடர்பினை இலகுவாய் பேண உதவுகின்றது. அத்துடன் இத்தகைய மொழி மாறும் இயல்புகள் இருமொழியச் சூழலில் குறித்த ஒரு மொழியின் ஆதிக்கத்தினைக் காட்டி நிற்பதோடு மட்டுமல்லாமல் அம் மொழியில் இம்மக்களுக்கு ஏற்பட்டுள்ள மொழித்தேர்ச்சியினையும் அம்மக்களது பிற சமூகக் கலப்பினையும் வெளிப்படுத்தி உள்ளன.

**ஆய்வின் முடிவு**

இவ்வாய்வில் கண்டறியப்பட்டதன் அடிப் படையில் இலங்கையில் தமிழ்-சிங்கள மக்கள் இணைந்து வாழும் இரு மொழிய பிரதேசங்களில் அவர்களது தொடர்ச்சியான சமூகக்கூட்டிணைப்பின் விளைவாக தமிழ் மக்களது அன்றாட வாழ்வில் சிங்கள மொழியாளர்கள் இல்லாத சூழ்நிலைகளி லும்கூட தமிழ் மக்களிடையே மேலே முன் வைத்த வகைப்பாடுகளின் அடிப்படை களில் சாதாரணமாகவே சரளமாக மொழி மாறும் இயல்புகள் ஏற்படுகின்ற மையை அச்சூழலில் வாழ்கின்ற தமிழ் மக்களது தொடர்பாடல் களை அவதானித்த தன் அடிப்படையில் கண்டறிய முடிந்துள்ளது.

அவ்வகையில் மொழி மாறுதல்கள் மொழியியல் அடிப்படையில் ஒலியியல், சொல்லியல், சொற்பொருளனியல் மற்றும் வாக்கியவியல் ரீதியில் ஏற்பட்டுள்ளதனை வகைப்படுத்தி காட்டமுடிந்துள்ளது. இவை மொழிமாறும் இயல்புகளின் வகைகளான Inter sentential switching, Intra sentential switching, Intra word switching, Tag switch sentential மற்றும் code - changing caused by direct translation போன்ற வகைப்பாடுகளின் ஊடாக இடம்பெற்றுள்ள தனையும் பகுப்பாய்வின் மூலம் எடுத்துக் காட்ட முடிந்துள்ளது.

அத்துடன் ஆய்வில் கண்டறியப்பட்ட வற்றை அடிப்படையாகக்கொண்டு இரு

மொழி வழக்குச் சூழலில் மொழிமாறும் இயல்புகள் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்களும் மொழிமாறும் இயல்புகளின் விளைவுகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. எனவே இலங்கையின் இருமொழிய சூழல் களில் தமிழ்-சிங்கள சமூகக் கூட்டிணைப் பின் விளைவாக தமிழ் மொழிக்கட்டமைப்பு களிலும் மொழிமாற்ற இயல்புகள் ஏற்பட் டுள்ளன என்பது தெளிவுபடுத்தப்பட்டுள் ளது. இத்தகைய இயல்புகள் சிங்கள மொழியிலும் ஏற்பட்டுள்ளதா என்பதனை இருமொழிய சூழல்களில் சிங்கள மொழிப் பிரயோகங்களை ஆய்வு செய்வதன் மூலமே கண்டறிந்து, இத்தகைய மொழி மாறும் இயல்புகள் பெரும்பான்மை மொழியின் ஆதிக்கத்தின் விளைவா அல்லது சமூக மான சமூகக்கூட்டிணைப்பின் விளைவா என்பதனை தகுந்தவாறு நிறுவ முடியும்.

**உசாத்துணைகள்**

Myers-Scotton C. (1993). *Social motivations for code switching: Evidence from Africa.* New York: Oxford Clarendon Press.

Silva, A.W.L. (2008). *Teach Yourself Sinhalese – A complete course for beginners with mini dictionary.* Ja-Ela (Sri Lanka): Pupudu Printers.

Suseendirarajah,S. (1999). 'இலங்கைத் தமிழ் - ஒரு குறிப்பு'. In Balasubramanian, K. & Ratnamalar, K. (eds.). *Studies in Sri Lankan Tamil linguistics and culture.* Sri Lanka: Prof. Swaminathan Suseendirarajah 65th birthday commemoration committee: 433

Chomsky, N. (2006). *Linguistic Contributions to the Study of mind: past.* Language and mind. (3rd edition).UK: Cambridge university press:1-20. (Assessed on 01.05.2021 from https://www.ugr.es/~fmanjon/Language%20and%20Mind.pdf)

Esen, S. (2019). *Code Switching: Definition, Types, and Examples:*1-13. (Assessed on 02.05.2021 from https://study.com/learn/lesson/code-switching-types-examples.html)

Kebeya, H. (2013). 'Inter- and Intra-Sentential Switching: Are they really Comparable?'. *International Journal of Humanities and Social Science.* Vol. 3 (5), Nairobi (Kenya): Department of English & Linguistics Kenyatta University: 225-233. (Assessed on 01.05.2021 from https://ir-library.ku. ac.ke/bitstream/handle)

Wimal,S. (2006). *A study of the common vocabulary of Tamil and Sinhala.* M.phil thesis (Unpublished). Sri lanka: University of Jaffna: 4-6.

சண்முகதாஸ், அ. (2006). *மொழியும் பிறதுறைகளும்.* சென்னை: குமரன் புத்தக இல்லம்.

சீனிவாசவர்மா, கோ. (1977). *கிளை மொழியியல்.* அண்ணாமலைநகர் இந்தியா: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

முத்துச்சண்முகம். (1998). *இக்கால மொழியியல்.* சென்னை: முல்லை நிலையம்.